**29.** குறிப்பிட்ட அவதானிப்பொன்றை மேற்கொள்ள முன்னர் கட்புல தியோடலைற்றை நிறுவுவதற்குத் தேவையான நான்கு படிமுறைகள் வருமாறு:

A - தியோடலைற்றை முக்காலியின் (Tripod) மீது வைத்து அதனை முளைக்கு மேலே மையப்படுத்தல்

B - முளைக்கு மேலே முக்காலியை இறுக்கமாக வைத்து மையப்படுத்தல்

C - முக்காலியின் கால்களைப் பயன்படுத்தி தியோடலைற்றின் வட்டவடிவ மட்டத்தின் குமிழியை (Circular level bubble) மையப்படுத்தல்

D - கால்களிலுள்ள திருகாணிகளைப் பயன்படுத்தி தியோடலைற்றின் தட்டு மட்டக் குமிழியை (Plate level bubble) மையப்படுத்தல்


ஆரம்பச் சந்தர்ப்பத்தில் மேற்படி பார்வைக்குரிய தியோடலைற்றினை நிறுவுவதன் சரியான ஒழுங்குமுறையாக அமைவது,

(1) A, B, C, D (2) A, B, D, C (3) A, C, B, D
(4) B, A, D, C (5) B, C, A, D

**30.** பின்வருவனவற்றுள் இயற்கையான நீரோட்டங்கள் மற்றும் ஆறுகளில் விடுவிக்கப்படும் தொழிற்சாலைக் கழிவுகளைக் கண்காணிப்பது தொடர்பான பொறுப்பை **வகிக்காத** அரச நிறுவனம் எது ?

(1) மத்திய சுற்றாடல் அதிகார சபை (2) தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபை
(3) பூகற்பவியல் ஆய்வு மற்றும் சுரங்கங்கள் பணியகம் (4) மாநகர சபை
(5) விவசாயத் திணைக்களம்

**31.** எளிமையான ஆதாரம் (Simply supported) வலியுறுத்தப்பட்ட கொங்கிறீற்றினாலான வளையொன்றைத் தயாரிக்கப் பயன்படுத்தப்படும் வலியுறுத்தல் கூண்டு உருவில் காட்டப்பட்டுள்ளது.




A - மூலகம் X இழுவிசையைத் தாங்கி நிற்கும்.

B - மூலகம் Y வலியுறுத்தப்பட்ட கூட்டுக்கு வெளியே கொங்கிறீற்று செல்வதைத் தடுக்க உதவும்.

C - மூலகம் Y தகைப்பைத் தாங்கி நிற்கும்.

D - மூலகம் Z நெருக்கல் விசையைத் தாங்கி நிற்கும்.

இவற்றுள் சரியான கூற்றுகளாக அமைவன,

(1) B, C ஆகியன மாத்திரம். (2) C, D ஆகியன மாத்திரம்.
(3) A, C, D ஆகியன மாத்திரம். (4) B, C, D ஆகியன மாத்திரம்.
(5) A, B, C, D ஆகியன யாவும்.

**32.** பின்வருவனவற்றுள், வலியுறுத்தப்பட்ட கொங்கிறீற்றினைப் பதப்படுத்துவதற்கான (curing) நோக்கங்களை எந்தக் கூற்றுகள் விளக்குகின்றன ?

A - மேற்பரப்பில் சீமெந்துக் கூழ்ப்படை ஏற்படலைக் குறைத்தல்

B - கொங்கிறீற்றின் மூலமாக எதிர்பார்க்கப்படும் உறுதியைப் பேணுதல்

C - ஆவியாதல் காரணமாக ஏற்படும் நீரிழப்பைத் தவிர்த்தல்

D - சுருங்குதலைத் (shrinkage) தவிர்த்தல்

இவற்றுள் சரியான கூற்றுகள்,

(1) A, B, C ஆகியன மாத்திரம். (2) A, B, D ஆகியன மாத்திரம்.
(3) A, C, D ஆகியன மாத்திரம். (4) B, C, D ஆகியன மாத்திரம்.
(5) A, B, C, D ஆகியன யாவும்.

**33.** கொங்கிறீற்று தொடர்பான சில கூற்றுகள் வருமாறு:

A - கொண்டுசெல்லலுக்கான நேரம் அதிகரிப்பதனால் பதமாகும் தன்மை குறைவடையும்.

B - அதிக நீர்/சீமெந்து விகிதத்துக்கமைய வேலைசெய்தகவு (work ability) குறைவடையும்.

C - கொங்கிறீற்றில் காணப்படும் அதிக வளிக்குமிழிகள் காரணமாக பதமாகும் தன்மை குறைவடையும்.

D - கரட்டுப் பரப்பிகளின் அதிகரித்த கோணற்றன்மை காரணமாக பதமாகும் தன்மை குறைவடையும்.

இவற்றுள் சரியான கூற்றுகளாவன,


(1) A, B ஆகியன மாத்திரம். (2) A, C ஆகியன மாத்திரம்.
(3) A, D ஆகியன மாத்திரம். (4) B, C ஆகியன மாத்திரம்.
(5) B, D ஆகியன மாத்திரம்.



Department of Examinations Sri Lanka
Department of Examinations Sri Lanka


**34.** பின்வரும் உரு அக்ரோ ஜாக்கு (Agro jack) பற்றிய விவரங்களைக் காட்டுகிறது. இதன் எந்தப் பாகம் இழுவிசை எதனையும் **தாங்கியிருப்பதில்லை** ?

(1) A
(2) B
(3) C
(4) D
(5) E




**35.** உருவில் காட்டப்பட்டுள்ள, யன்னல் பலகணிக்கு மேலே நீட்டியவாறு காணப்படும் வலியுறுத்தப்பட்ட லிண்டர் பற்றிய கூற்றுகள் சில கீழே தரப்பட்டுள்ளன.


A - சுவர் ஆதாரங்கள் இரண்டையும் நிலையான (fixed) ஆதாரங்களாகக் கருதலாம்.
B - வளையின் நடு அகல்வின் மேற்புற இழைகள் நெருக்கலுக்கு உள்ளாகியிருக்கும்.
C - வளையின் நீள அச்சின் வழியே கொய்வுத் (shear) தகைப்பு காணப்படலாம்.
D - வளை முறுக்கத்துக்கு (torsion) உள்ளாகும்.



இந்தக் கூற்றுகளில் சரியானவை,

(1) A, B, C மாத்திரம்.
(2) A, B, D மாத்திரம்.
(3) A, C, D மாத்திரம்.
(4) B, C, D மாத்திரம்.
(5) A, B, C, D ஆகியன யாவும்.

**36.** உருவில் நியமத் தகைப்புப் பரிசோதனையின்போது அவதானிக்கப்பட்ட இழிவுக்காபன் உருக்கில் தகைப்பு–விகாரம் தொழிற்பட்ட விதம் காட்டப்பட்டுள்ளது.




A - சீரான இழுவிசையின் கீழே மாதிரியில் குழிவு ஏற்படும்.
B - நேர்கோட்டு தகைப்பு–விகார நடத்தை, இழுவை விகாரத்தின் போது மட்டுமே அவதானிக்கப்பட்டுள்ளது.
C - விகார கடினமாதல், அதன் குழிவுச் சக்தி அதிகரிக்கக் காரணமாகும்.
D - உடைவின்போது (rupture) குறுக்குவெட்டுமுகப் பரப்பளவு குறைவடைதல் அவதானிக்கப்பட்டது.

தகைப்பு–விகார நடத்தை தொடர்பான மேற்படி கூற்றுகளில் சரியானவை யாவை ?

(1) A, B, C ஆகியன மாத்திரம்.
(2) A, B, D ஆகியன மாத்திரம்.
(3) A, C, D ஆகியன மாத்திரம்.
(4) B, C, D ஆகியன மாத்திரம்.
(5) A, B, C, D ஆகியன யாவும்.

[பக். 8 ஐப் பார்க்க

Department of Examinations Sri Lanka

**37.** அனேக தனிமாடி இல்லங்களின் கட்டுமானச் சுமையானது கண்டகற் கட்டின் மூலம் மேற்கொள்ளப்பட்ட அத்திவாரத்தின் மூலமாகவே நிலத்தின்மீது செலுத்தப்படும். இது பற்றிய சில கூற்றுகள் கீழே தரப்பட்டுள்ளன.

A - கீழேயுள்ள மண்ணின் தாங்கற் கொள்ளளவுக்கு அமையவே அத்திவாரத்தின் அகலம் தங்கியிருக்கும்.
B - சீமெந்து இடப்பட்டு கண்ட கற்களை ஒன்றையொன்று பூட்டும் வகையில் வைத்துக் கட்டப்பட்ட பிளிந்து சுவர்கட்டின் மூலம் உறுதி கிடைக்கும்.
C - கண்டகற் கட்டானது சுமைதாங்கும் செங்கற் சுவர்க்கட்டு மற்றும் வலியுறுத்தப்பட்ட கொங்கிறீற்றுத் தூண்கள் ஆகியவற்றுக்கு ஆதாரமாக அமையும்.
D - சுமைதாங்கும் கண்டகற் கட்டுக்கு 1 : 5 எனும் விகிதத்தில் தயாரிக்கப்பட்ட சீமெந்துச் சாந்து சிபார்சு செய்யப்படும்.

இவற்றுள் சரியான கூற்றுகளைத் தெரிவுசெய்க.

(1) A, B, C ஆகியன மாத்திரம். (2) A, B, D ஆகியன மாத்திரம்.
(3) A, C, D ஆகியன மாத்திரம். (4) B, C, D ஆகியன மாத்திரம்.
(5) A, B, C, D ஆகியன யாவும்.

**38.** பின்வருவனவற்றில், கூறுகளின் நோக்கங்களைச் சரியாக விவரிக்கும் கூற்றுகளைத் தெரிக.

A - கீழ்ப்புறத்தே உள்ள உப ஆதாரங்கள் வாகன அச்சின் சுமையை தாங்க உதவும்.
B - பிற்றுமன் மேற்பரப்பு பரிகரிப்புகள் நீர் ஊடுசெல்லலைத் தடுக்கும்.
C - வீதி அடித்தளம், உபதளம் ஆகியன இறுக்கப்பட்ட கரட்டுப் பரப்புகளைக் கொண்டிருக்கும்.
D - இடத்துக்குரிய (in-situ) மண் அமைப்பு வீதியின் உப தளமாக அமையலாம்.

(1) A, B, C ஆகியன மாத்திரம். (2) A, B, D ஆகியன மாத்திரம்.
(3) A, C, D ஆகியன மாத்திரம். (4) B, C, D ஆகியன மாத்திரம்.
(5) A, B, C, D ஆகியன யாவும்.

**39.** இலங்கையின் பாடசாலை மற்றும் வைத்தியசாலைகள் ஆகியவற்றுக்கு அண்மையில் உள்ள சகல பிரதேசங்களிலும் கடைப்பிடிக்கப்பட வேண்டிய வேக எல்லை,

(1) 20 km (2) 25 km (3) 30 km (4) 35 km (5) 40 km

**40.** இழுசட்ட அளவு (Tie measurement) எனப்படுவது,

(1) வழுவைச் செவ்வைபார்க்கும்போது பெறப்படும் அளவீடாகும்.
(2) பீடக்குறியை (Bench mark) நிறுவுவதற்காகப் பெறப்படும் அளவீடாகும்.
(3) குறுக்கொன்றில் இரண்டு சங்கிலிக் கோடுகளுக்கு இடையிலான கோணமாகும்.
(4) சமவுயரக்கோட்டு அளவையின் மட்ட அளவீடாகும்.
(5) சங்கிலிக் கோட்டின் முழு வட்டத் திசைகோளாகும் (whole circle bearing).

**41.** திண்மக் கழிவுப்பொருள்களைச் சாம்பராக்குதல் பற்றிய பின்வரும் கூற்றுகளுள் **பிழையானது** எது ?

(1) கழிவுப்பொருள்களின் அளவு, திணிவு ஆகியவற்றில் பாரியளவிலான வீழ்ச்சி ஏற்படும்.
(2) பார உலோகங்கள் மற்றும் பிற நச்சுப் பதார்த்தங்கள் அடங்கியிருக்கும்.
(3) சாம்பராக்கும் அலகுகளை அமைக்க ஏற்படும் செலவு ஒப்பீட்டளவில் குறைவாகும்.
(4) சாம்பராக்கும் செயன்முறையை மின்னுற்பத்திக்கெனப் பயன்படுத்தலாம்.
(5) சாம்பராக்கும் செயன்முறை அதிக வெப்பநிலையில் மேற்கொள்ளப்பட வேண்டும்.

**42.** வருடத்தின் குறித்த ஒரு மாதத்தில் கட்டடமொன்றின் $15\ m \times 2.5\ m$ அளவுடைய செவ்வகவடிவக் கூரையின்மீது 15 mm நாளாந்த சராசரி மழைவீழ்ச்சி கிடைக்கின்றது. கூரையின்மீது விழும் மழைநீர் சேகரிக்கப்படுமெனில், இரண்டு நாட்கள் கிடைக்கும் மழைநீரைச் சேமிக்கத் தேவையான தாங்கியின் ஆகக் குறைந்த கொள்ளளவு எவ்வளவாகும் ? (மழைநீர்ச் சேகரிப்பு முறைமையின் நீரைச் சேகரிக்கும் வினைத்திறன் 75% ஆகும்.)

(1) $4.20\ m^3$ (2) $4.11\ m^3$ (3) $4.22\ m^3$ (4) $3.20\ m^3$ (5) $4.25\ m^3$

**43.** உள்ளூராட்சி நிறுவனத்தின் தேவைக்கமைய அழுக்குத்தொட்டி, குடிநீர்க் கிணறு ஆகியவற்றுக்கு இடையில் பேணப்பட வேண்டிய இழிவுத்தூரம்

(1) 40 அடி (2) 50 அடி (3) 80 அடி (4) 60 அடி (5) 110 அடி

**44.** கட்டட நிருமாணிப்புத் தொடர்பான பிரமாணங்கள் பற்றிய கூற்றுகள் சில கீழே தரப்பட்டுள்ளன.

A - வதிவதற்குப் பொருத்தமான எந்தவொரு கட்டடத்திற்கும் முக்கலை மின்சார இணைப்பைப் பெறுவதற்கான உரித்து உண்டு.
B - இரண்டு மாடிகளைக் கொண்ட கட்டடமொன்றின் இரண்டு மாடிகளுக்கும் தனித்தனியே மின்னிணைப்புகளைப் பெற்றுக்கொள்ள முடியும்.
C - நில அளவையின்போது பகுதிகளாகப் பிரிக்கப்படக்கூடிய ஆகக் குறைந்த நிலப்பரப்பின் அளவு 6 பேர்ச் ஆகும்.
D - வதிவதற்கான கட்டடமொன்றை நிருமாணிக்கும் காலப்பகுதியில் அதற்கு மின்னிணைப்பைப் பெற்றுக்கொள்ள முடியும்.

மேலே குறிப்பிடப்பட்ட கூற்றுகளுள் சரியானவை,

(1) A, B ஆகியன மாத்திரம். (2) A, C ஆகியன மாத்திரம்.
(3) A, B, C ஆகியன மாத்திரம். (4) B, C, D மாத்திரம்.
(5) A, B, C, D ஆகியன யாவும்.

[பக். 9 ஐப் பார்க்க

Department of Examinations Sri Lanka
Department of Examinations Sri Lanka

**45.** புவியிலுள்ள பல்வேறு நீர்மூலங்களின் தரம் பற்றிய கூற்றுகள் சில வருமாறு:

A - ஆற்றுநீரில் அடையல் அடங்கியிருக்கலாம்.

B - ஆழமான குழாய்க்கிணற்று நீரில் கல்சியம், மகனீசியம் ஆகியன அடங்கியிருக்கலாம்.

C - ஆழம் குறைவான கிணற்று நீரில் கனியுப்புகள் மிகச் சொற்ப அளவில் காணப்படலாம்.

D - உண்ணாட்டு நீர்நிலைகளின் உவர்த்தன்மை அதிக மட்டத்தில் காணப்படும்.

இவற்றுள் சரியான கூற்றுகள் யாவை ?

(1) A, B, C ஆகியன மாத்திரம். (2) A, C, D ஆகியன மாத்திரம்.
(3) A, B, D ஆகியன மாத்திரம். (4) B, C, D ஆகியன மாத்திரம்.
(5) A, B, C, D ஆகியன யாவும்.

**46.** வீட்டு நீர்வழங்கலுக்கென உயரத்தில் வைக்கப்பட்டுள்ள நீர்த்தேக்கத் தாங்கியைப் பயன்படுத்துவது தொடர்பான சில கூற்றுகள் வருமாறு:

A - தேக்கத்தாங்கி வைக்கப்பட்டுள்ள உயரத்தினை அதிகரிப்பதனால் முறைமையில் நீரமுக்கத்தை அதிகரிக்கலாம்.

B - வெளியேற்று குழாயின் விட்டத்தை அதிகரிப்பதன் மூலம் முறைமையில் நீரின் அமுக்கத்தை அதிகரிக்கலாம்.

C - பிரதான வழங்கல் குழாயில் அமுக்கவீழ்ச்சி ஏற்படும்போதும் நீரின் அமுக்கத்தை மாறாது பேணலாம்.

D - மேலதிக நீரைத் தேக்கிவைக்கலாம்.

இவற்றுள் சரியான கூற்றுகள் யாவை ?

(1) A, B, C ஆகியன மாத்திரம். (2) A, C, D ஆகியன மாத்திரம்.
(3) A, B, D ஆகியன மாத்திரம். (4) B, C, D ஆகியன மாத்திரம்.
(5) A, B, C, D ஆகியன யாவும்.

**47.** அழுக்குத் தொட்டிக்குக் காற்றூட்டல் குழாய் பொருத்தப்படுவது,

(1) அழுக்குத் தொட்டியில் உருவாகும் காபனீரொட்சைட்டை அகற்றுவதற்காகும்.
(2) அழுக்குத் தொட்டிக்குப் புவியீர்ப்பின்கீழ் கழிவுகள் பாய்ந்து வருவதை இலகுவாக்குவதற்காகும்.
(3) கழிவுச் சேகரிப்புக் குழாய்களில் ஏற்படக்கூடிய அடைப்புகளைத் தவிர்ப்பதற்காகும்.
(4) நுண்ணங்கித் தொழிற்பாட்டுக்கென ஒட்சிசனை வழங்குவதற்காகும்.
(5) கழிவுகள் கொண்டு செல்லப்படுவதனை இலகுபடுத்துவதற்கான நீரை உட்செலுத்துவதற்காகும்.

**48.** மாடிவீட்டுக்கு அத்தியாவசியமாக அமையும், தீ அவசரகால வெளியேற்றக் கதவுகள் (Fire exits) தொடர்பான கூற்றுகள் சில வருமாறு:

A - வதிவோர் பதற்றத்துக்கு உள்ளாவதால் சுருளியுரு வெளியேற்று வழி (Spiral exits) பொருத்தமற்றது.

B - அவசரகால வெளியேற்றக் கதவினை அமைக்கும்போது பயன்படுத்தப்படும் கட்டடப் பொருட்கள் பற்றிக் கவனம் செலுத்துவது அவசியமானதன்று.

C - அதிர்ச்சியைக் குறைப்பதற்கென அவசரகாலக் கதவுகள் உறுதியாகப் பொருத்தப்பட வேண்டும்.

D - அவசரகாலக் கதவு நுழைவை, கட்டடத்தின் அந்தத்தில் அமைக்க வேண்டும்.

இவற்றுள் தீ அவசரகாலக் கதவு பற்றிய சரியான கூற்றுகள் யாவை ?

(1) A, B ஆகியன மாத்திரம். (2) A, C ஆகியன மாத்திரம்.
(3) A, D ஆகியன மாத்திரம். (4) B, C ஆகியன மாத்திரம்.
(5) C, D ஆகியன யாவும்.

**49.** நவீன எந்திரவியற் கைத்தொழில்களில் அத்தியாவசியமான பதார்த்தமாக அமையும் சீமெந்தினை களஞ்சியப்படுத்துவது தொடர்பான கூற்றுகள் சில வருமாறு:

A - ஈரலிப்பற்ற இடத்தில் சீமெந்து களஞ்சியப்படுத்தப்பட வேண்டும்.

B - சீமெந்தினைக் களஞ்சியப்படுத்தும்போது பைக்கற்றுகளை அடுக்கிவைக்கும் திசைமுகம் பற்றிக் கவனம் செலுத்த வேண்டும்.

C - 'முதலில் களஞ்சியப்படுத்தியவற்றை முதலில் பயன்படுத்தல்' என்பது களஞ்சியப்படுத்தப்பட்ட சீமெந்து தொடர்பான சிறந்த பழக்கமாகும்.

D - எப்பொழுதும் சீமெந்து பலகைகளின் மீது களஞ்சியப்படுத்தப்பட வேண்டும்.

இவற்றுள் நிருமாணிப்பு நடைபெறும் இடமொன்றில் சீமெந்தைக் களஞ்சியப்படுத்தல் தொடர்பான சரியான கூற்றுகள் யாவை ?

(1) A, B, C ஆகியன மாத்திரம். (2) A, B, D ஆகியன மாத்திரம்.
(3) B, C, D ஆகியன மாத்திரம். (4) A, C, D ஆகியன மாத்திரம்.
(5) A, B, C, D ஆகியன யாவும்.

Department of Examinations Sri Lanka
Department of Examinations Sri Lanka

[பக். 10 ஐப் பார்க்க

**50.** பின்வரும் கூற்றுகளைக் கருதுக.

A - ஊறவைத்தல் தொட்டி (soaking pit), சமையலறையிலிருந்து வெளியேற்றப்படும் நீரை நிலத்துக்கு விடுவிக்க ஏற்றதாக திட்டமிடப்பட்டிருக்கும்.

B - அழுகற்றொட்டி எனப்படுவது, சிதைவடைந்த திண்மக் கழிவுப் பதார்த்தங்களைத் தேக்கி வைக்கும் இடமாகும்.

C - அழுகற்றொட்டியின் உள்ளிழு மட்டம் (Inlet level), அதன் வெளியேற்று மட்டத்தை (outlet level) விட, தாழ்வாக அமைந்திருக்க வேண்டும்.

D - முத்திரையிடப்பட்ட அழுகற்றொட்டிக்கு வளிசெல் துளை கொண்ட குழாய் (Vent) அவசியமாகும்.

மேற்குறிப்பிட்டவற்றுள் வீட்டுக் கழிகான் முறைமை தொடர்பான சரியான கூற்றுகள் யாவை ?

(1) A, B, C ஆகியன மாத்திரம். (2) A, B, D ஆகியன மாத்திரம்.
(3) A, C, D ஆகியன மாத்திரம். (4) B, C, D ஆகியன மாத்திரம்.
(5) A, B, C, D ஆகியன யாவும்.

* * *

Department of Examinations Sri Lanka
Department of Examinations Sri Lanka

இப்பகுதியில் எதனையும் எழுதுதல் ஆகாது. பரீட்சகர்களுக்கு மாத்திரம்

(c) மாநாட்டு மண்டபமானது, பல்லூடக வசதிகள் (Multimedia facilities), காணொளி மாநாடு (Video conferenecing) நடாத்துதல் ஆகிய வசதிகளைக் கொண்டதாக தூர இடத்திலுள்ளவரொருவர் இணைய வசதிகளினூடாகத் தொடரறா (Online) முறையில் செயலமர்வுகள், மாநாடுகள் ஆகியவற்றை நடாத்துவதற்கு ஏற்ற வகையில் நவீனமயப்படுத்தப்படவுள்ளது.

(i) அடிப்படை உள்ளீட்டு/வருவிளைவுச் சாதனங்களுக்கு (devices) மேலதிகமாகத் தேவைப்படும் உள்ளீட்டு/வருவிளைச் சாதனங்கள் **மூன்றைப்** பட்டியலிடுக.

(1) ..........................................................................................


(2) ..........................................................................................

(3) ..........................................................................................

(ii) பயன்படுத்தப்படும் அடிப்படை மென்பொருட்களுக்கு மேலதிகமாக மாநாட்டு மண்டபத்துக்குத் தேவையான ஒரு விசேட மென்பொருளைக் குறிப்பிடுக.

..........................................................................................

**3.** விவசாய உபகரணக் களஞ்சியமொன்றின் கூரை, கல்வனைசுப்படுத்தப்பட்ட அலையுருக் கூரைத்தகட்டினால் வேயப்பட்டுள்ளது. கட்டடம், துண்டுவேலை மூலம் உள் அளவீடுகள் 6 m × 3 m கொண்டதாக அமைக்கப்பட்டுள்ளது. அதன் எதிரான பக்கங்கள் இரண்டும் கேவல் சுவர்களைக் கொண்டனவாகும். உலோகத்தகடுகள் 1800 mm × 875 mm அளவைக் கொண்டனவாகும். உலோகத் தகட்டுக்குரிய நியம விவரக்கூறுகள் வருமாறு:




| CGI இற்கான விவரக்கூறு | வேய்தலுக்கான சிபார்சு (நேபாள தரத்துக்கமைய) |
|---|---|
| இழிவுத் தடிப்பு | 0.35 mm |
| நாகப்பூச்சு | குறைந்தது ஒரு பக்கத்திற்கு, 120 g/m$^2$ நாகம் கொண்டதாக வெப்ப அமிழ்த்தல் (Hot dip) மூலம் கல்வனைசுப்படுத்தப்பட்டிருத்தல் |
| ஒரு கட்டின் அண்ணளவான நிறை | 55 kg |
| பேரளவிலான அலையுரு இடைவெளி | 18 mm (பொறுவெளி + 1 – 1.5 mm) |
| பேரளவிலான அலையுரு இடைவெளி | 76.2 mm (பொறுவெளி + 1 – 2 mm) |
| அலையுருக்களின் எண்ணிக்கை | 1 / 2 + 10 + 1/2 mm) |
| தகட்டின் அகலம் | 875 mm (பொறுவெளி + 1 – 10 mm) |

https://www.sheltercluster - org

Department of Examinations Sri Lanka

இப்பகுதியில் எதனையும் எழுதுதல் ஆகாது.
பரீட்சகர்களுக்கு மாத்திரம்

**4.** வீட்டின் மாதாந்த நீர்நுகர்வை அளவிடுவதற்காக தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையினால் நீர்மானிகள் பொருத்தப்பட்டுள்ளன.

(a) இலங்கையில் நீர்மானிகள் மூலம் அளவீடுகளை மேற்கொள்ளப் பயன்படுத்தப்படும் நியம அளவீட்டு அலகு யாது? அந்த நீர்மானிகளின் மூலம் அளவிடப்படக்கூடிய நீரின் அதிகுறைந்த அளவைக் குறிப்பிடுக.

.....................................................................................................................

(b) ஐந்து பேரைக் கொண்ட வீடொன்றின் நீர்நுகர்வை அளவிடுவதற்காக நீர்மானியொன்று பயன்படுத்தப்படுகிறது. நாளொன்றுக்கான தனிநபர் நீர்நுகர்வு 120 லீற்றர் எனக்கொண்டு, நாளாந்த நீர்நுகர்வை நியம அலகுகளில் கணிக்க. இந்த வீட்டின் மாதாந்த நீர்நுகர்வைக் கணிக்க. உங்கள் எடுகோள்களைக் குறிப்பிடுக.

.....................................................................................................................

.....................................................................................................................

.....................................................................................................................

.....................................................................................................................

(c) நீர்மானியில் வழு ஏற்பட்டமை காரணமாக உரிய அளவைவிட அதிக பணம் செலுத்தப்படுகிறதென வீட்டு உரிமையாளர் சந்தேகிக்கின்றார். அவரது நீர் வழங்கல் முறைமையில் நீர்க்கசிவு உள்ளதாவெனக் கண்டறிந்து, நீர்நுகர்வுக்கென இறுக்கப்பட்ட பணத்தொகை அதிகரித்தமைக்கான காரணம் நீர்மானிக் கோளாறு அன்று என எவ்வாறு உறுதிப்படுத்தலாமென விளக்குக.

.....................................................................................................................

.....................................................................................................................

.....................................................................................................................

.....................................................................................................................

(d) நீர்வழங்கல் முறைமையில் நீர்க்கசிவு பற்றிப் பரிசீலிக்கப்பட்ட பின்னர், அதிக இறுப்பனவுக்குக் காரணம் நீர்மானியில் ஏற்பட்ட குறைபாடாகுமென எவ்வாறு உறுதிப்படுத்தலாமென விளக்குக.

.....................................................................................................................

.....................................................................................................................

.....................................................................................................................

.....................................................................................................................

(e) குழாய்மூலமாக விநியோகிக்கப்படும் நீரில் குறிப்பிட்டளவு கல்சியம், மக்னீசியம் உப்புகள் காணப்பட வாய்ப்புண்டு. இந்த உப்புகள் வீட்டு நீர்மானியையும் விநியோக முறைமையின் பாகங்களையும் எவ்வாறு பாதிக்குமென விளக்குக.

.....................................................................................................................

.....................................................................................................................

.....................................................................................................................

.....................................................................................................................

.....................................................................................................................


.....................................................................................................................

* *

Department of Examinations Sri Lanka

## பகுதி C

**4.** மக்கள் வதிகின்ற இரண்டு மாடிக் கட்டடத்தின் நிரல்-தகடு ஒழுங்கமைப்பின் வகைக்குரிய தளக்கோலமொன்று உருவில் காட்டப்பட்டுள்ளது.






(a) கட்டடத்தின் தூண்களையும் தகட்டையும் அமைவு செய்யும்போது (setting out) தேவைப்படும் பல்வேறு உபகரணங்களையும் சாதனங்களையும் பட்டியற்படுத்துக.

(b) வளை BCD இன் வலியுறுத்தப்பட்ட விவரங்களின் பருமட்டான வரிப்படத்தை வரைக. நியமக் குறியீடுகளைப் பயன்படுத்தி பகுதிகளைப் பெயரிடுக.

(c) இதற்கென 10 mm உருக்குக் கோல்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன எனக் கொண்டு, அடசுப்பலகை (slab panel) A இற்கான வலியுறுத்தல் விவரங்களின் பருமட்டான வரிப்படத்தை வரைக. நியமக் குறியீடுகளைப் பயன்படுத்தி பகுதிகளைப் பெயரிடுக.

**5.** உருவில் கிராமமொன்றின் சனசமூக நிலையத்தின் உத்தேச திட்டப்படம் காட்டப்பட்டுள்ளது. கட்டடத்தின் நான்கு மூலைகளும் 225 mm × 225 mm அளவுடைய வலியுறுத்திய கொங்கிறீற்றினாலான தூண்களினாலும் 900 mm × 900 mm சதுரவடிவ அடி (square Pad) அத்திவாரத்தினாலும் ஆக்கப்பட்டுள்ளன. சுவர் 225 mm தடிப்புக் கொண்ட செங்கற் சுவர்க்கட்டாக அமைந்திருப்பதுடன் AB, DC ஆகிய சுவர்களின் உயரம் 3.0 m ஆகும். AD, BC ஆகியன மத்திய உயரம் 3.6 m இனைக் கொண்ட கேவற் (Gable) சுவர்கள் ஆகும். உருவில் எல்லா அளவீடுகளும் mm இல் தரப்பட்டுள்ளன.




பின்வரும் வேலை உருப்படிகளுக்கான அளவெடுப்புப் படிவங்களைத் தயார்செய்க.

(a) அத்திவாரத்துக்கான கான்களை வெட்டுதல்

(b) அத்திவாரத்துக்கான கொங்கிறீற்று

(c) செங்கற்களைப் பரப்புதல்

(d) செங்கற் சுவர்

உங்களது எடுகோள்களைக் குறிப்பிடுக.

**6.** இலங்கையின் உலர் வலயத்திலுள்ள வீடுகளில், மழைநீரைச் சேகரிப்பதற்கென மழைநீர் சேகரிப்பு முறைமையொன்று திட்டமிடப்பட்டுள்ளது. இது இரண்டு கூரைப்பீலிகளுக்கு இடையிலான இடைத்தூரம் 10 m ஆக அமைந்த 12 m நீளமான இரண்டு சிறகுகளைக் கொண்ட கேவல் கூரையைக் கொண்டதாகும். இறக்கிக் குழாய்கள் மூலம் நீரானது சேகரிக்கப்படும். கூரையிலிருந்து நீரைச் சேகரிக்கும் இரண்டு மழைநீர்ப் பீலிகளும் கட்டடத்தின் அந்தத்திலுள்ள இறக்கிக் குழாய்களுடன் இணைக்கப்பட்டுள்ளன. இறக்கிக் குழாய்கள் மூலம் சேகரிக்கப்படும் நீரானது மணல் வடிகட்டியினூடாக (sand filter) சேகரிப்புத் தொட்டிக்குச் செல்லும்.

(a) மழைக்காலத்தில் நாளாந்த மழைவீழ்ச்சி 20mm உம் மழைநீர் சேகரிப்பு வினைத்திறன் 80% உம் எனின், மூன்று நாட்கள் கிடைக்கும் மழைநீரைச் சேகரிக்கத் தேவையான தாங்கியின் கொள்ளளவு எவ்வளவு?

(b) மழைநீரைச் சேகரித்தல் மற்றும் விநியோக முறைமையின் பருமட்டான வரிப்படத்தை வரைந்து பிரதான பகுதிகளைப் பெயரிடுக.

(c) மழைநீரைக் குடிப்பதற்கும் உணவுகளைச் சமைக்கவும் பயன்படுத்துவதெனில், நீரின் தரத்தைப் பேணுவதற்குத் தேவையான படிமுறைகளை ஆராய்க.

* * *

Department of Examinations Sri Lanka
Department of Examinations Sri Lanka